**செ.வெ.எண்: 33** **நாள்: 18.07.2016**

# பத்திரிகை செய்தி

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் 2016-2017-ஆம் ஆண்டுக்கான **ஜூலை** மாத மாவட்ட அளவிலான மாதாந்திர விளையாட்டுப் போட்டிகள் 27.07.2016 அன்று புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டரங்கத்திடலில் தடகளம், கையுந்துபந்து (சிறுவர் மற்றும் சிறுமியர்), மேசைப்பந்து (சிறுவர் மற்றும் சிறுமியர்) மற்றும் நீச்சல் விளையாட்டுகளில் கீழ்க்காணும் நிகழ்வுகளில் நடத்தப்படவுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **தடகளம்**<br>**(ஆடவர் மற்றும் மகளிர்)** | : | **100 மீ, 400 மீ, 1500 மீ, நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், குண்டு எறிதல் மற்றும் தட்டு எறிதல்** | |
| **குழு விளையாட்டு** | : | **1. கையுந்துபந்து (சிறுவர் மற்றும் சிறுமியர்கள் மட்டும்)**<br>**2. மேசைப்பந்து (சிறுவர் மற்றும் சிறுமியர்கள் மட்டும்)** | |
| **நீச்சல்**<br>**(ஆடவர் மற்றும் மகளிர்)** | : | **Free Style** | **: 50மீ, 100மீ, 200மீ, 400மீ** |
| | | **Back Stroke** | **: 50 மீ** |
| | | **Breast Stroke** | **: 50 மீ** |
| | | **Butterfly** | **: 50 மீ மற்றும் IM 200 மீ** |

**போட்டிகளில் கலந்து கொள்வதற்கான தகுதிகள்:**

**பள்ளிகளில் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகள் மட்டும் மாதாந்திர விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.**

**தடகளம் மற்றும் நீச்சல் விளையாட்டுப் போட்டிகளில் ஒருவர் ஒரு விளையாட்டு நிகழ்வில் மட்டுமே கலந்து கொள்ளலாம்.**

**ஜூலை** 2016-ஆம் மாத மாதாந்திர போட்டிகளில் கலந்து கொள்ள விருப்பமுள்ள விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் 27.07.2016 அன்று காலை 8.00 மணிக்கு விளையாட்டரங்கத்திற்கு வந்து, புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்களிடம் தங்களது பெயரினை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**